சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

VOL–11. தொகுதி-11.	April ஏப்ரல் 1915.	No-9. பகுதி-9.

ஔவியம் பேசுத லாக்கத்திற் கழிவு.

பொறாமையென்பது தன்னையுடையவன் மேன்மேலுயர்தலை யடையாவாறு இம்மை மறுமை யென்னு மிருமையிலும் அவனைக் கெடுப்பதாக விருத்தலின், பிறரது ஆக்கத்தைக்கண்டு பொறாமையடைந்து பேசுவது எவர்க்குந் தகுதியுடைய தன்றாம். "கூறிடுங் கொடிய காமங் குரோதமே யுலோப மோகம், பாறிய மதங்களேமாற் சரியமுட் பகையா றென்ப" என்று சூடாமணி நிகண்டு கூறுகின்றவாறு, காமம் (ஆசை), குரோதம் (கோபம்), உலோபம் (ஈயாமை), மோகம் (விபரீதவுணர்ச்சி), மதம் (கர்வம்), மாற்சரியம் (பொறாமை) என்னும் பகைவர்க்கமாறனுள் பொறாமையென்பதும் ஒன்றாக விருத்தலின், அதனைப் பிரயத்தன பூர்வகமாக ஒழிப்பது ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாத கடமையாம். பிறரது ஆக்கத்தைக்கண்டு பொறாமை யடைந்து பேசாதவர், காமக் குரோத முதலியவற்றை யெல்லா மொழித்தவ ராவரென்பதை யுணர்த்துதற் பொருட்டே மேற்படி நிகண்டு மாற்சரியமென்னும் பொறாமைக் குணத்தை யிறுதியில் வைத்துக்கூறியது. எவரிடத்துப் பிறரது ஆக்கத்தைக் கண்டு பொறாமை யடைந்து பேசுவதில்லையோ அவரிடத்துக் காம முதலிய தீயகுணங்களுள் ஒன்றுமில்லையா மென்று ஒரு தலையாக உணரலாம். ஒருதலை-நிச்சயம்.

ஆக்கமாவது ஒருவர் செல்வம், கல்வி அறிவு, ஆண்மை, குடிப் பிறப்பு முதலியவற்றால் மேன்மேலுயர்தலாம். பிறர் செல்வம்கல்வி முதலிய வற்றால் மேன்மே லுயர்தலைக்கண்டு பொறாமை யடைந்து பேசுபவர் இம்மைப் பயனையும் மறுமைப் பயனையு மிழந்து வருந்துவது தவறாத விஷயமாம். "அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத், தீயுழி யுய்த்து விடும். அழுக்காறு(பொறாமை) என்று சொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவி தன்னை யுடையானை இம்மைக்கட் செல்வத்தைக்கெடுத்து, மறுமைக்கண் நரகத்திற் செலுத்தி விடும்" என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளி யிருப்பதனை நன்குணர்ந்து நோக்குவோர்க்குப் பிறரது ஆக்கத்தைக் கண்டு பொறாமை யடைந்து பேசுவோர் இம்மைக் கண் (இப்பிறப்பில்) தரித்திரத்தையும் (மறுமையில் (இறந்த பின்னர்) நரகத்தையும் அடைந்து தீராததுக்கத்திற்கு ஆளாய் வருத்த முறுவரென்பது செவ்வையாக விளங்கு மன்றோ? பிறரது ஆக்கத்தைக்கண்டு பொறாமை யடைந்து பேசுவது துன்பத்தையே தருவதாக விருத்தலின், அவ்வாறு பேசாதிருப்பதே அறிவுடையார்க் கழகாவதாம். செல்வம் கல்வி முதலியவற்றை யுடையாரைக் கண்ட விடத்து மனஞ்சகியாது வெறுத்துப் பேசுவது எதனாலென்று சிறிது சீர் தூக்கி நோக்குவோமாயின், அது பொறாமைக் குணத்தாலென்பது நன்கு விளங்குவதாம். அவ்வாறு பேசுபவர்க்கு இம்மைப் பயனாகிய புகழும், மறுமைப்பயனாகிய புண்ணியலோகப் பிராப்தியும் ஒரு வாற்றானும் சம்பவியா வாகலின், புகழையும் புண்ணியலோகப் பிராப்தியையும் பெற விரும்புவோர் ஔவியம் பேசுதலை அத்தியாவசியகமாக விட்டொழிதல் வேண்டும்.

"ஔவியம் பேசுதலாக்கத்திற் கழிவு-பிறரது ஆக்கத்தைக் கண்டு † பொறாமைச்சொற்களைப் பேசுவது (தன்னைப்பேசுவோனது) ஆக்கத்திற்கு அழிவைத்தருவதாம்" என்று நமது ஞானத்தாயாகிய ஔவைப் பிராட்டியார் திருவாய் மலர்ந்தருளியிருப்பது பொறாமைச் சொற்களைப் பேசுபவனுக்கு அதனால் அவன் மேன்மேலுயர்தற்குக் காரணமாகிய செல்வம் கல்வி முதலியன வெல்லாம் அழிந்துபோ மென்பதனை யன்றோ உணர்த்துகின்றது? தன

† பொறாமைச் சொற்கள் - மனத்திலுள்ள பொறாமையை அறிவிக்கும் சொற்கள்.

தாக்கத்தை யழித்தற்கேதுவாயுள்ள பொறாமைச் சொற்களைப் பேசுகின்றவன் பிறர்க்கா விரோதியாகின்றான்.? தனக்குத்தானே யன்றோ விரோதியாகின்றான்? தனது மேன்மை யழிதற்கேதுவாகிய செயல்களைச் செய்பவனை அறிவுடையார் விவேகி யென்று கூறுவரோ? என்ன வென்று கூறுவர்? அவிவேகி அல்லது மூடன் அல்லது பேதை யென்றன்றோ கூறுவர்?

பழிபாவங்கட் கேதுவாய செயல்களைச் செய்வதற்கு நாணமுறாமை, செய்யுங் காரியமிது தவிருங்காரியமிது என்றுணராமை, முகங்கொடுத்துப் பேசாமை, செல்வம் கல்வி குடிப்பிறப்பு முதலியவற்றைப் பாது காவாமை யென்பன யாரிடத்திருக்கின்றனவென்று சிறிதுாகித்து நோக்குவோ மாயின், அவை பொறாமைச் சொற்களைச் சொல்லுகின்றவ ரிடத்தன்றி மற்றவரிடத்தில்லையாமென்பது நன்கு விளங்கும். பொறாமைச் சொற்களைப் பேசுவது துன்பங்கள் அடுக்கடுக்காக வருவதற்குக்காரணமாயிருத்தலின், அதனைப் பிரயத்ன பூர்வகமாக விட்டொழிப்பது நம்மனோர்க்கு அத்தியாவசியகமான கடமையாம். ஔவையார் ஆத்திசூடியில்" ஔவியம் பேசேல் - (நீ எப்போதும்) பொறாமைச் சொற்களைப் பேசாதிருக்கக்கடவாய்" என்று கூறியதனுடைமை யாது, கொன்றை வேந்தனில் 'ஔவியம் பேசுத லாக்கத்திற் கழிவு' என்றும் கூறியிருப்பதை நன்கூகித்துநோக்குவோமாயின், அது பொறாமைச் சொற்களைப் பேசாதிருப்பது ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாத கடமையா மென்பதை வற்புறுத்துவதாமன்றோ? இவ்வாறு ஔவைப்பிராட்டியார் வற்புறுத்திக் கூறியிருப்பதை நம்மனோர் கவனியாதிருப்பது நமக்கும் நம்மைச் சேர்ந்தவர்க்கும் பெருங் கேட்டை விளைப்பதாக விருக்கின்றது. அக்கேடொழிய வேண்டுமாயின், நம்மனோர் பொறாமைச் சொற்களை மறந்தும் பேசாதிருக்க முயன்று வருதல் வேண்டும்.

சிசுபாலன் எதனால் நாசமானான்; துரியோதனன் எதனாலழிந்தான் ? பொறாமையினாலன்றோ ? பொறாமை தன்னையுடையவரையும், அவரைச் சேர்ந்தவரையும் அழிப்பதாக விருத்தலின், பொறாமைச் சொற்களைப் பேசுவதைக் கவனமாக விட்டொழித்து வருதல் நம்மனோர்க்கு அத்தியாவசிக மானதாம். சிசுபாலன் தரும புத்திரர் செய்த ராஜசூய யாகத்தில் கண்ணபிரானுக்கு அக்கிரபூசை செய்ததைப் பொறாது இகழ்ந்துபேசினமையால் நாச

மடைந்தானென்பதும், துரியோதனன் பாண்டவர்மீது கொண்ட பொறாமையால் அழிந்தானென்பதும் (பாரதத்தில்) மிகு பிரசித்த மாமன்றோ? ஆகையால், பொறாமைச் சொற்களைப் பேசுவது பொல்லாதனவற்றுளெல்லாம் மிகு பொல்லாததா மென்றுணர்ந்து, அதனைப் பையப் பைய இனியாவது விட முதலுதல் வேண்டும்.

பிறர் செல்வம் கல்வி முதலியவற்றால் மேன்மே லுயர்தலைக் கண்டுமகிழ்வது அறிவுடையார்க்குப்பேரணிகலமாம்; அஃதில்லாதவர்க்கே பொறாமையுண்டாகின்றது; அதனால்எனக்குள்ளசெல்வம் கல்விமுதலியனபோலப் பிறர்க்குண்டாகலாமா என்னும் அசூயை யுண்டாகின்றது; அதனால் அவரைக்கெடுக்க வேண்டு மென்னும் வயிரமுண்டாகின்றது; அதனால் அவரை யிகழ்ந்து கூறல் முதலிய அக்கிரமச் செயல்களைச் செய்தல் சம்பவிக்கின்றது என்று நன்குணர்வோமாயின், பொறாமைக் குணத்தை யொழிக்கப் பெரிதும் முயற்சி செய்வோம். "போது மென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்னும் பழமொழிக்கு நாம் இலக்கியமாக நிற்போயின், பொறாமைக்குணத்தை மிகு எளிதாகவொழித்தற் குரியவராவோம். பிறர் சென்ற பிறப்பில் நல்வினைகளை நன்றாகச் செய்தனர்; அதனாலவர்செல்வம் கல்வி முதலிய வற்றால் மேன்மேலுயர்ந்து வருகின்றார்;நாமும் அவ்வாறு இப்பிறப்பில் நல்வினைகளைச் செய்து வருவோமாயின், அவ்வாறு உயர்ந்து வரலாமென்று கருதி, ஔவியம்பேசாது நல்வினைகளைச் செய்து வருவோமாயின், நாம் ஆக்கமுடையவராதல் நிச்சயமாம்.

"அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம், பேணா தழுக்கறுப் பான்—மறுமைக்கும் இம்மைக்கும் அறமுஞ்செல்வமுமாகிய உறுப்புக்களைத் தனக்கு வேண்டாதானென்று சொல்லப் படுவான் பிறன் செல்வங் கண்டவழி அதற்கு உவவாது(மகிழாது) அழுக்காற்றை (பொறாமைப்படுதலை) ச் செய்வான்"

என்று திருக்குறள் கூறுவது இங்கு நன்குணர்தற் பாலதாம்.

சுக நூல்.

18-ம் பாடம்.

சுத்தமான காற்றையே சுவாசிக்கவேண்டியதவசியம். அநேகமாய் நம்முடைய வாழ்நாட்களில் பாதி நன்ருக மூடப்பட்ட, நெருக்கமான அறைகளிலே கழிந்துபோகின்றது. மணிக்கு மணி, சுவாசக்காற்றுக் கெட்டுப்போய்க்கொண்டிருக்கின்றது வெகு நேரம் அடைப்பட்டிருந்த காற்றில் ஒரு விதமான வாசனை உண்டாகின்றதல்லவா? காற்று கெட்டுப்போனதற்கு இஃது ஒரு விசேஷமான அடையாளம். அதிகாலையில், நித்திரை விட்டெழும்போது, சில சமயம் தலைபளுவும், ஒருவிதமான மயக்கமும் உண்டாவதைப் பலர் உணர்ந்திருக்கலாம். அது தான் மூச்சடைப்பின் ஆரம்பம்.

இரவில், வெளிக்காற்ருனது குளிர்ந்திருக்கின்ற படியால், அதைச் சுவாசித்ததில் பிசகு என்று நாம் அறிவின்மையால் தவருக நினைக்கின்ருேம். உண்மையில் அக்காற்றினுல் கெடுதியே இல்லை. வைத்தியர்கள், இருமல் காசம் முதலிய வியாதிகளால் அவஸ்தைப்படும் நோயாளிகளை அக்காற்றையே தாராளமாகச் சுவாசிக்கச் செய்கின்ருர்கள். மிகவும் குளிரான தேசத்தில் வசிப்பவர்களாகிய ஆங்கிலர்கள் தங்களுடைய படுக்கை அறையின் ஜன்னல்களை இரவில் கூட மூடுகிறதே இல்லை.

வயல்களின் மீது பெய்யும் மூடுபனியால் நனைந்து, குளிர்ந்து இருக்கும் காற்றைச் சுவாசித்துக்கொண்டு, சதா வெட்டவெளியிலேயே தங்கள் இரவைக் கழிக்கும் ஆடுமாடுகளின் சௌக்கியமானது, கொட்டகை தொழுவம் முதலியவற்றிலே ஜீவிக்கும் மிருகங்களின் சௌக்கியத்தை விட மேன்மையாக இருப்பதை நாம் காண்கின்ருேமே.

ஆகையால் இரவில் நம்முடைய படுக்கை அறைகளிலே காற்றை வாவிட வேண்டியது ஒரு முக்கியமான காரியம். ஜன்னலை இலேசாகக் கொஞ்சம் திறந்துவைத்துக் கொண்டாவது, அல்லது படுக்கை அறையைச் சேர்ந்த அடுத்த அறையின் ஜன்னல்களை விசாலமாகத் திறந்துவைத்துக்கொண்டாவது தூங்குவது நலம்.

மனிதர்கள் அநேகமாய்ப் பகலிலே கூட அறைக்குள் காற்றைப் போதுமானபடி செல்லவிடுகிறதில்லை. அதற்கு ஒரு சமயம்

காற்று வீசுகிறதென்றும், மற்றொரு சமயம், அதிக உஷ்ணம், அதிகக்குளிர் என்றும் இப்படியாகப் பலவிதமான முகாந்திரங்களை ஆரோபிக்கின்றார்கள். அக்காரணங்கள் அறிவின்மையைக் காட்டுகின்றன. வாசஸ்தானத்தில் காற்று நன்றாக நடமாடாவிட்டால் அதனுள்ளே இருக்கும் சொற்பக்காற்று மிகவும் சீக்கிரமாகக் கெட்டுப்போகும். அதனாலே சில சமயங்களில் மூச்சடைப்பும், அநேகமாய்ப் பாண்டு, சோகை முதலிய நோய்களும் ஏற்படும்.

எப்படியிருந்தபோதிலும், வெளிக்காற்றானது வீட்டினுள்ள காற்றைவிட மிகவும் பரிசுத்தமானது. ஆகையால் நம்முடைய தினசரிவேலையோடு, அவகாசம் கிடைக்கும்போதெல்லாம், வெளியே சென்று உலாவிவருவதை ஒரு கடமையாகக் கொள்ளல் வேண்டும். பட்டணங்களிலே, விவேகமுள்ள தொழிலாளிகள் இதை நன்கு அறிவார்கள். அவர்கள், சமயம் வாய்த்தபோதெல்லாம், அதாவது ஞாயிற்றுக்கிழமை முதலிய ஓய்வு நாட்களில், குடும்பசகிதமாக, சமீபமான கிராமம், தோட்டம், வயல் முதலிய இடங்களுக்குச் சென்று அந்நாட்களைச் சுகமாகவே கழிக்கின்றார்கள். விவேகமில்லாத தொழிலாளி தன்னுடைய ஓய்வு நாட்களை சாராயக் கடைகளிலேயும், சூதுக் கடைகளிலேயும் கழிக்கின்றான். அவனுடைய குடும்பமும், அவனும், சுத்தமான காற்றை சுவாசகோசங்கள் நிரம்ப சுவாசிப்பதால் உண்டாகும் ஆரோக்கியத்தையும், நெருக்கமான, இருண்ட, துர் நாற்றமுள்ள தெரு, அறை முதலியவற்றை விட்டு விட்டு, ஒரு நாளையாவது வெட்ட வெளியிலே கழிக்கும் பாக்கியத்தையும் அடையப்போகிறதே இல்லை.

குழந்தைகளைக் கூட, சுத்தமான, புதிய காற்றைச் சுவாசிக்கச் செய்யவேண்டும். அவர்களைப் பிரதிதினமும், நல்லகாற்றுள்ள இடங்களுக்குக் கொண்டுபோய் உலாவிவரச்செய்யவேண்டும். மிகவும் குளிராக இருக்கும்போதும், அல்லது பலமான காற்றடிக்கும்போதும் அவர்களை வெளியே எடுத்துக்கொண்டு போவது தவறாம். எங்ஙனமாயினும், குழந்தைகளின் அறையில் சுத்தமான காற்றே நடமாடவேண்டும்.

19-ம் பாடம்.

தோல்.

நமக்கு நரை சால்கள் இரண்டென்று முற்கெனவே சொல்லியிருக்கிறோம். தோலானது மூன்றாவது நரை சால். அதனால் நாம்

பிராணவாயுவைக் கிரக்கிக்கின்றோம்; கரியமிலவாயுவை வெளியே தள்ளிவிடுகின்றோம். தவிரவும் தோலுக்குள்ளே சில கிரந்திகள் இருக்கின்றன. அவை வேர்வைக் கிரந்திகள். அவற்றிலே சுரக்கும் வேர்வையான இரத்தத்திலுள்ள அசுத்தங்களை எடுத்துக்கொண்டு சின்னஞ்சிறிய துவாரங்கள் (மயிர்க்கால்கள்) வழியாக வெளியே வந்துவிடும்.

தோலானது மேற்சொன்ன தன்னுடைய வேலைகளைச் சரியாகச்செய்யவேண்டுமானால், அஃது எப்போதும் மிகவும்பரிசுத்தமாக இருக்கவேண்டு மல்லவா? இதனாலே ஸ்நானங்கள் அத்தியாவசிய மென்று ஏற்பட்டது. முகம், கை, கால் இவற்றை அடிக்கடி எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். கூடுமானால், பிரதி தினமும், அதிகாலையில் ஸ்நானம் செய்தல் சுகமாம். இதைச்சுலபமாகப் பழக்கத்துக்குக் கொண்டுவந்து விடலாம். வெந்நீர் ஸ்நானம் இன்பமாக இருக்கும்; மேலும் சிரமத்தைப் பரிகரிக்கும்; மயிர்க்கண்களை அடைத்து விடும்படியான அசுத்தங்களைச் செவ்வையாக நீக்கி, சரீரத்தை மிகவும் பரிசுத்தமாக்கும். நதி அல்லது சமுத்திரத்திலே ஸ்நானம் செய்தலும் சுகமேயாம். ஆனால் குளிர்கண்ட உடனே, ஜலத்தை விட்டெழுந்து விடவேண்டும். மேலும் ஜலத்திலே நீந்துதல் நன்று.

தினந்தோறும் ஸ்நாநம் செய்துகொண்டு வந்தால், தோலானது, மூச்சுவிடுதல், வேர்வையை வெளியே தள்ளுதல் என்னும் தன்னுடைய இரண்டு வேலைகளையும் ஒழுங்காகச் செய்து கொண்டுவரும். தவிர, சொறி, சிரங்கு, முதலிய தோல் சம்பந்தமான வியாதிகள் நம்மை அணுகா.

தலைமயிர்:—

தலையின் தோலானது மயிர்க்களால் மூடப்பட்டிருக்கின்ற படியால், அதனுடைய சுத்தத்தைப்பற்றித் தகுந்த ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். மயிர்கள், சிக்காமலிருக்கும் பொருட்டு, அவற்றைச் சீவி, தைலங்களால் அவற்றை மிருதுவாக வைத்திருத்தல் நன்று. தலையிலே ரோமமிருப்பது அழகாம். தவிர, உஷ்ணம், குளிர் இவற்றால் உபத்திரவ மில்லாமலிருக்கும்படி, ரோமங்கள் தாம் தலையைக் காக்கின்றன.

காற்று, வெளிச்சம், சுத்தம் இம்மூன்றும் மயிர்களுக்கு அவசியமானவை. குழந்தைகளைப் பிரதிதினமும் ஸ்நானம் செய்

விக்கவேண்டும். அப்போது தான் மயிர்கள் அடர்த்தியாக வளரும். மேலும் தினந்தோறும் ஸ்நானம் பண்ணுக குழந்தைகளுக்கு அடிக்கடி சளிபிடிக்கும்.

தலைமயிர்களுக்குள்ளே காற்று நடமாடுதல் வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அவை கொஞ்சமாக உதிர்ந்துபோம். பளுவான குல்லாய், தொப்பி, முதலியவற்றால் சதா மூடப்பட்ட தலையிலே ரோமம் அரிதாகிவிடும். வழுக்கையான உச்சந் தலையோடும், பொறிகள் மீது அடர்த்தியான ரோமங்களோடும் எத்தனையோ பேர் காணப் படுகின்றார்கள். இரவில் தலையிலே ஒன்றும் தரித்துக் கொள்ளாமல், வெறுந்தலையோடு தூங்குவது சுகமாம். கடைசியாகத் தலைமயிர்களைப்பற்றி ஒருவார்த்தை அவற்றைக் கவனிக்காமற்போனால், பேன்கள் உற்பத்தியாகி அதி சீக்கிரமாக விருத்தியாகி விடும். தலையிலே ஒரு பேன் இருந்தால் போதும்; இரண்டு மாதத்திற்குள் 5000 பேன்கள் உற்பத்தியாய்விடும்.

புரோபசர். என். சுப்பிரமணிய அய்யர், புதுவை.

விவேகானந்த சுவாமிகளின் அருள்வாக்கியத் திரட்டு.

கடவுள்மீதுள்ள அத்யந்தப் பிரேமை பக்தி எனப்படும். இந்தப் பிரேமைதான் உண்மையான இறவாத் தன்மையாகும். இவ்வமரத்தன்மையை யடைந்த புருஷன் பூர்ணதிருப்தியை யடைந்தவனாய் மாச்சரிய மடைவதில்லை அமரத்தன்மையை யறிந்த மனிதன் உன்மத்தனாகி விடுகின்றான்.

ஆசைகளை நிறைவேற்ற பக்தியை உபயோகிக்கக்கூடாது? ஏனெனில் எல்லாவாசைகளுக்கும் அதுவே இடையூறாகும். பிரேமைகதுரிய அறிகுறிகளை நாரதர் பின்வருமாறு கூறியிருக்கிறார். எல்லா வெண்ணங்களையும், 'எல்லாமொழிகளையும், 'எல்லாக்கிர்த்தியங்களையும் கடவுளுக்கு அற்பணஞ்செய்துவிட்டு லவலேசமும் கடவுளை மறப்பதால் ஒருவன் ஆராமையை யடைவானானால் அப்பொழுதுதான் அவனுக்குப் பிரேமை துவக்கமுற்றதென மதிக்கற்பாலது.'

'மனிதர்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் காட்டும் நேசமானது ஒரு பிரயோசனத்தை எதிர்பார்த்தே காட்டப்

படுகின்றது. இவ்விதப் பிரதிலாபத்தைக் கருதியதல்ல மேற்சொன்ன பிரேமை. இதுபற்றியே, பிரேமைக் கொப்பாகிய பக்தி கிடையாது."

"உலகவழக்கத்தையும், சாஸ்திரத்தில் கூறியிருக்கும் வழக்கத்தையுங் கடந்து சென்றவன் எவனோ அவனே சன்னியாசி யெனப்படுவன். எப்பொழுது நமது ஆத்மா முற்றும் கடவுளிடத்தில் செல்லுகிறதோ எப்பொழுது நாம் கடவுளைச்சரணாகதியடைகின்றோமோ அப்பொழுது இவ்விதப் பிரேமை உதிக்கப் போகின்றதென்று நமக்குத் தெரிகிறது."

கடவுளுக்கும் அவர்மீது உனக்கிருக்கும் பிரேமைக்கும் மத்தியில் யாதொன்றையும் நிற்கவிடாதே. அவரைநேசி, அவரைநேசி, அவரைநேசி. உலகத்தார் என்னவேண்டுமென்றாலும் சொல்லட்டும். பக்தி மூன்றுவிதமாகும் ஒன்று, இதுவேண்டும் அதுவேண்டும் என்று இறந்துகேட்டல். இவற்றிற்குப் பதில் ஒன்றுங்கொடுப்பதற்கு எண்ணமிருப்பதில்லை. இரண்டாவது, நேசம்பண்ணி நேசத்தை எதிர்பார்ப்பது. மூன்றாவது, பக்திசெய்வதே யொழியப் பதிலொன்றுங் கோருவதில்லை. இந்தப்பிரேமை விளக்கு வெளிச்சத்தின்மீது விட்டிற்பூச்சிகளுக் கிருக்கும் பிரேமை போலாம்.

பிரேமையானது கிரியையைவிட உயர்ந்தது; யோகத்தைவிட உயர்ந்தது; ஞானத்தைவிட உயர்ந்தது.

அத்தியந்த ப்ரேமைக்கும் ஞானத்திற்கும் வித்தியாசமில்லை. இரண்டுமொன்றே என்னலாம்.

கடவுளைப்பற்றிக் கற்பனைபண்ணுவது தகுதியன்று. நாம் பிரேமைபாராட்டி உழைக்கவேண்டும். உலகத்தையும் அதன் கண்ணுள்ள பொருளையும் விட்டுவிடு. அல்லும்பகலும் கடவுளைப்பற்றி நினை. கூடியமட்டும் வேறெதைப்பற்றியும் நினையாதே. தினந்தோறும் எண்ணவேண்டிய இன்றியமையாத எண்ணங்களைக் கடவுள் வாயிலாகவே எண்ணக்கூடும். அவருக்காகப்புசி, பானம்பண்ணு, நித்திரைசெய்; எல்லாவற்றிலும் அவரைப்பார். எல்லாவிடத்திலும் கடவுளைப்பற்றிப் பேசு. இது மிகுந்த பிரயோஜனத்தைத் தரத்தக்கது.

கடவுளுடைய அருளையும் அவரது மேன்மைவாய்ந்த குழந்தைகளினுடைய (அவதார புருஷர்களுடைய) கிருபையையும் பெறு. கடவுளை அடையக்கூடிய மார்க்கங்கள் இவை இரண்டுந்தாம். அவரது ஞானபுத்திரர்களின் சாங்கத்தியம் கிடைப்பது மிக அரிது. அவரிடத்தில் ஒரு ஐந்துநிமிஷம் சாங்கத்தியம் உனக்குண்டாகுமானால் நீ வேறுமனிதனாக ஆய்விடுவாய். நீஇதை உண்மையிலே விரும்புவாயானல் அத்தகையபுருஷர் உன்னிடம் வருவார். கடவுள்மீது அன்புள்ள புண்ணிய புருஷர்கள் தாங்கள் நிற்கும் இடத்தைப் பரிசுத்தமாக்குகின்றனர். அவ்வவதார புருஷர்களின் தன்மை அத்தன்மையதாகும். அவர்களைக் கடவுளுக்கு வேறென மதிக்கக்கூடாது. அவர்கள் பேசினல் அவர்களுடைய சொற்கள் வேதவாக்கிய மாகும். அவர்களிருக்கும் இடம் அவர்களுடைய (Vibrations) ஆலோலனத்தால் அஃதாவது சுத்த எண்ணங்களான சலனத்தால் நிரம்புகின்றது. அவ்விடம் புகும் எத்தன்மையோருக்கும் அப்புனிதத் தன்மையை உணர்ந்து தாமும் புனிதராய் விடவேண்டுமென்னும் எண்ணமுண்டாகிறது. அவ்வித பக்தர்களுக்குச் சாதி, கல்வி, அழகு, பிறப்பு, செல்வம், தொழில் ஆகிய இத்தகைய வித்தியாசம் கிடையாது; ஏனெனில் யாவையும் கடவுளுடையதாகலின்.

கெட்ட சகவாசத்தை முற்றிலும் விட்டுவிட்டு, ஆரம்பத்தில் இப்படிச் செய்யவேண்டும். உன்மனதைச்சிதறச்செய்யக்கூடிய உலகசகவாசத்தைவிட்டுவிடு. யான் எனது என்றயாவையும் உதறித்தள்ளு. பிரபஞ்சத்தில் தன்னுடைய தென்பது ஒன்றுமில்லாதவனிடத்தே கடவுள்வருகிறார். உலக ஆசையின் பந்தத்தின் கட்டை அவிழ்த்துவிடு சோம்பலை அதிக்கிரமித்துச் செல்லு. நாம் என்னமாய் ஆய்விடுவோமோ என்னும் கிலேசத்தைத் தாண்டிச் செல்லு. நீ செய்தகர்மத்தின் பலனைப்பற்றி ஒருபொழுதும் சிந்தியாதே. எல்லாவற்றையும் கடவுளுக்கு அர்ப்பணஞ்செய்துவிட்டு உன்வேலையைப்பார். அதைப்பற்றி யோசிக்காதே. ஆத்மா முற்றும் தைலதாரைபோல இடையறாது கடவுளிடம் செல்லத் ததும்பிக்கொண்டேயிருக்கிறது. பணம்சம்பாதிக்க நேரமில்லை. பேரும்புகழும் நாடப் பொழுதில்லை. கடவுள்தவிர வேறொன்றையுஞ் சிந்திக்கக் காலமில்லை. இத்தருணத்தில் தான் அளவிடப்படாததும்அதிசயிக்கத் தக்கதுமான பிரேமானந்தமானது நமது இருதயத்தில் ஜனிக்கும். ஒவ்வொரு நிமிஷமும் கடவுள்மேலிருக்

கும் பிரேமையானது அதிகரிக்கும். இந்தப் பிரேமையானது தெவிட்டுவதில்லை. எப்பொழுதும் புதிதாகவே யிருக்கிறது. ஸ்வானுபவத்தில் மாத்திரம் ஓர்ந்துணரக் கூடியதாயிருக்கிறது. எல்லாவற்றிலும் பிரேமையானது அதிக சுலபமானது. அது தர்க்க நியாயத்திற்காகக் காத்துக்கொண் டிருப்பதில்லை. அது சுபாவ சித்தமாயுள்ளது. நமக்கு அதனிருக்கையை ரூபிக்க ருஜு வேண்டியதில்லை; அத்தாட்சியும் வேண்டியதில்லை. யாதொரு வஸ்துவும் நமது மனத்தால் வரையறைக்குட்படுத்தப்படுவதே யுக்தி எனப்படும். ஒருவலையைவீசி ஏதோ ஒன்றைப் பிடிக்கிறோம். பின்னர்ப் பிடிபட்ட பொருளைக்காட்டி நாம் கூறியவஸ்து இதுவென விளக்கிக்காட்டுகிறோம். இம்மாதிரியாகக் கடவுளை ஒருவலையில் பிடிக்கக்கூடுமென்பது ஒருபொழுதும் இயலாத காரியம். பிரேமையானது எதனோடும் பிணைக்கப்பட்டதன்று. நாம் தப்பிதமாக நேசித்தபோதிலும் அது (பிரேமை) தன் நிஜஸ்வரூபத்தினின் றும்அகலுகிறதில்லை. சாந்தியும் ஆனந்தமும் அதன் சுபாவமாகும். ஒரு கொலையாளி தன்குழந்தைக்கு முத்தமிடும்பொழுது அவன் தனது துர்க்குணமுதலிய எல்லாவற்றையும் மறந்து அன்பின்மயமாய்த் தோன்றுகிறான். தான் என்பதை விட்டுவிடு. அகங்காரத்தை முற்றிலும் விட்டுவிடு. கோபம் காமம் இவைகளினின்றும் வெளிவந்துவிடு. எல்லாவற்றையும் கடவுளுக்கு அர்ப்பணஞ் செய்துவிடு. நானில்லை. நீ உள்ளாய். பழையமனிதன் முற்றிலும் மறைந்துவிட்டான். நீதான் எஞ்சிநிற்கின்றாய். நான்தான் நீ. ஒருவரையும் நோவாதே. உனக்குக்கெடுதி சம்பவிக்குமாயின் கடவுள் உன்னுடன் விளையாடுகிறார் என்று தெரிந்துகொண்டு மிகுந்த களிப்புடன் இருப்பாயாக.

பே. மாணிக்கசாமி முதலியார், பீ. ஏ.

Wise Sayings.

1. More than we choose, is more than we need, and only burden to the bearer.

2. We most of us give ourselves an immense amount of useless trouble, encumber ourselves, as it were, on the journey of life with a dead weight of unnecessary baggage; and as a man maketh his train longer, he makes his wings shorter.

குசேலோபாக்கியான வசனம்.

(முன்தொடர்ச்சி)

குசேலமா முனிவர் கண்ணபிரானைத் தரிசிக்குமாறு விரைந்து செல்லுவதை முன்பவரை மடமை காரணமாகப் பழித்துக் கூறிய துர்க்குணிகள் கண்டு யாம் என்ன காரியம் செய்துவிட்டோம்;இப்பெரியானை யெளியானென்று யாம்அவமதித்துக்கூறிய தீமைச்சொற்க ளெல்லாம் இப்போது நம்மனதைச் சுட்டு வருத்துகின்றன; நாம் கூறிய இவற்றை அரசர்க்கரசராகிய கண்ணபிரான் உணர்வராயின், நமக்கு வராததீங்குமுண்டோ(பெருந்தீமை யுண்டாகுமன்றோ)? இப்பெரியான் பெருங்கருணை பொருந்திய மனத்தினையுடைய மறையவனாதலால், நாம் கூறிய அகந்தை மொழிகளைக் கண்ணபிரானுக்குஅறிவிக்கமாட்டான்;மேலுமிவன் பெருஞ்செல்வமுடைய வேந்தர் போற்றிவணங்கும் சிறப்புடையவனென்றுகூறித் தம்மைத் தாமே வெறுத்துக் கொள்ளுவாராயினர்.

கண்ணபிரானைத் தரிசனஞ் செய்யவேண்டுமென்னும் அன்பும் வாயிற் காவலரும் முன்னேசெல்லப் பின்னே செல்லுங் குசேலமாமுனிவர் தாம் செல்லும் வழியிலுள்ள மேன்மைக ளெல்லாவற்றையும் பார்த்து ஆச்சரிய மடைந்து, சுவர்க்கலோகம் இத்துவாரகையினும் சிறப்புடையதென்று கூறுவா ரறிவில்லாதவராவரென்று தீர்மானித்து, இரத்தின கசிதமாகவிளங்கும்வாயில்களெல்லாவற்றையுங்கடந்துசென்று மணிமுடிமன்னர்கள்கண்ணபிரானைத தரிசிக்க வேண்டிவந்து தங்கியிருக்கின்ற பெருஞ்சபா மண்டபங்களையும் தாண்டிப்போய், இருளும் நீலரத்தினமும் தமது கருமை நிறத்திற்கு முன்னே வெளுத்துத் தோன்றக் கண்ணபிரான்தமது தேவிமாருடன் வீற்றிருக்கும் பொன்னாற் செய்து இரத்தினங்களிழைத்துள்ள வாயிலையுடைய அந்தப்புரத்திற்குஅருகேவந்தனர். கண்ணபிரானது தேவிமார் ஓவியப புலவர்க்குப் பொருளை மிகுதியாகக் கொடுத்து அவர்களைக்கொண் டெழுதுவித்த கண்ணபிரானது சித்திர உருவங்கள் ஆங்காங்கு விளங்குவதைக் காணுந்தோறும் அவற்றைக் கண்ணபிரானென்றே கருதிச் செல்லும் குசேலமா முனிவர் இவ்வாறு வாராநிற்க, கண்ணபிரான் குசேலர் இன்னமும் வந்திலரே யென்று சூரியன் வரவை நோக்கும் செந்தாமரையைப்போன்றும், சந்திரன் வரவைநோக்கும் செவ்வாம்பலைப்போன்றும், மேகத்தின் வரவை நோக்கும் மயிலைப்போன்றும், தாய்ப்பசுவின் வரவை நோக்கும் புனிற்றிளங்கன்றைப்

போன்றும், தமது வரவைநோக்கும் தமதன்பனைப் போன்றும், நீர்வரவை நோக்கும் நீர் வேட்கை யுடையானைப்போன்றும் சயனத்தின் மீதிருந்து குசேலருடைய வரவை எதிர்பார்த்திருந்தனர்.

அப்போது குசேலமாமுனிவர் மங்கையர்கள் காவல் செய்யும் அந்தப்புரத்தின் வாயிலையுங் கடந்து, பெண்கள் பலர் சூழ்ந்துள்ள ஏகாந்தமான அந்தப்புரத்திற்குச் செல்லுவாராயினர். சென்ற அவர் ஒரு பெருந்தரித்திரன் ஒரு பெரும்புதையலைத் தன்னெதிரே கண்டாற் போலவும், உணவில்லாது வருந்துவோன் தேவாமிர்தத்தைத் தன்னெதிரே கண்டாற்போலவும், நிற்க நிழல் கிடைக்கப்பெறாது வெயிலில் அலைந்து திரிவோன் கற்பக விருஷத்தைத் தன்னெதிரே கண்டாற்போலவும், ஒரு நற்சீடன் மெய்க் குருவைத் தன்னெதிரே கண்டாற் போலவும், திருமகள் வசிக்கும் மார்பையுடையவனும் நீல நிற முடையவனும் சக்கரத்தை வலக்கரத்திலும் சங்கை யிடக்கரத்திலு முடையவனும் வாசுதேவனென்னுந் திருநாம முடையவனும் துளப மாலையுடையவனுமாகிய கண்ணபிரானைத் தன்னெதிரே கண்டு தரிசித்தார்.

அவ்வாறு கண்ணபிரானைத்தரிசித்த குசேலமாமுனிவர் தரிசித்தவளவிலே பெருமகிழ்ச்சியடைந்து, விரைவாக நடந்து அவரருகே சென்றனர். அவரவ்வாறு வருதலைக் கண்ட கண்ணபிரான் அணையை யுடைத்தெழும் வெள்ளம்போல விரைவாகத் தமது புஷ்பசயனத்தினின்று மெழுந்து, பேரன்பு பொங்கி வழிய அவரெதிரே சென்று அவரது பாதங்களைத் தமது நெற்றி திலகம் நிலத்திற்படுமாறு வணங்கி, புளகாங்கிதமடைந்து அவரை நன்றாகச் சேர்த்துக்கட்டித் தழுவிக்கொண்டு, இறைவன் வேதமுதல்வனென்னும் மெய்நட்பினனென்றும உலகத்தார் கூறுவதைக் காத்தருளினார். பிறகு இந்நாள் நன்னாளாயிற்று, இந்நாள் நன்னாளாயிற்று; யான் செய்த அறங்கள் பலித்தன, யான் செய்த அறங்கள் பலித்தன; இந்த வீடும் யோக்கியதையை யடைந்தது என்று பலமுறை கூறி அக் குசேலமுனிவரைக் கொண்டாடி, அங்குள்ள ஒரு மாளிகையினுள்ளே இரத்தின பீடத்தின்மீது குசேலரை யெழுந்தருளுமாறு செய்துபொற் குடத்திற்கொண்டு வந்த புதிய தீர்த்தத்தால் ஸ்நானஞ் செய்வித்து, ஒரு வெண்ணிற ஆடையால் துடைத்து, பட்டாடையை

உடுத்தி, கலவைச்சாந்தணிந்து, முத்தாகிய அட்சதையைத்தூவி, பூமாலைசூடி, நறும்புகைகாட்டி, நெய்விளக்குச்சுற்றி, கர்ப்பூரம் ஏற்றிவைத்துள்ள ஆலத்திப் பாத்திரத்தை யெடுத்துச் சுற்றி, தேவாமிர்தம் போன்ற நல்லுணவளித்து, அம்முனிவரது வாயையுங் கைகளையும் சுத்த நீரிற்கழுவித் தூயவஸ்திரத்தாற் றுடைத்து, பின்னர் அவர்க்குப் பாக்கு வெற்றிலை தந்து, உபசாரவார்த்தைகளைச் சொல்லி, அவரை உப்பரிகையின்மீதிட்டுள்ள தமது சயனத்தின்மே லேறச் செய்து, அவர் அதன்கண் சயனித்தபின்னர் அருகே இருந்து அவரது முதுகைத் தடவிக்கொடுத்து, குளிர்ச்சியுண்டாமாறு தமது கரத்தால் வெண்சாமரையை வீசி, இச்சீர்பாதங்கள் வழி நடந்தமையால் இளைத்தனவோவென்று பணிவாகக்கூறி, பெருங்களிப்புடன் அவரது பாதங்களை மெதுவாகப் பிடித்துக்கொண்டிருந்தார்.

கண்ணபிரான் இவ்வாறு உபசாரங்கள் செய்வதைக்கண்ட குசேலமாமுனிவர் மெய்ம்மறந்து ஒன்றும் பேசாது, ஞானயோக நற்றவச் சிரேஷ்டர்கள் பாலர் பித்தர் பிசாசர்போல விருப்பாரென்று வேதங்கள் கூறுகின்றமையால், கண்ணபிரானது திவ்வியமங்கள வடிவத்தைப் பிரிவிலாவாறு தியானஞ் செய்துகொண்டு, அதனாலுண்டாகின்ற ஆநந்தவாரியில் மூழ்கி யசைவற்றிருந்தார். குளவியெடுத்துத் தன் கூண்டில் வைத்துள்ள பச்சைப்புழு அக்குளவியின் ஓசையை யன்றி மற்றொன்றையுங் கேளாதவாறுபோல, கண்ணபிரானை யன்றி மற்றொன்றையும் நினையாத குசேலர் தமது மனைவி சுசீலை கூறியவாறு செல்வத்தை விரும்பிக் கேட்பரோ? அவர் கண்ணபிரானது திருவுருவத்தைத் தரிசித்தலாலும், அவரது கழுத்தில் விளங்கும் துளசிமாலையின் நறுமணத்தை முகருவதாலும், அவரது முகமன் சொற்களைக் கேட்பதாலும், அவர் திருமேனியின் பரிசம்படுதலாலும், அவரது திருநாமங்களை மனததுள்ளே துதிப்பதாலும் முறையே கண், மூக்கு, செவி, மெய், வாய் என்னும் இந்திரியங்களெங்கும் பேராநந்தத்தை யடையக் குடத்திலிட்ட தீபம் போன்றிருந்தார்; மேலும், அவர் நீரைச் சேர்ந்த உப்புப்போலவும், நெருப்பைச்சேர்ந்த கர்ப்பூரம் போலவும் தமது மனம் கண்ணபிரானிடத்துக் கலத்தலால், உகலவாழ்க்கையின் பற்றொழித்து, தம்மை மறந்து நிச்சலமாயிருந்தார்.

255

இவ்வாறு குசேலர் தம்மைமறந்திருக்க, இவரது வரலாறனைத்தையும் அவர் சொல்லுவதற்குமுன்னே உணர்ந்துள்ள கண்ணபிரான் பெருமகிழ்வோடு அவரது முகத்தைப்பார்த்து, வேதமுடிவுணர்ந்த வேதியரே! உம்முடைய தரிசனத்தால் யான் உடல்பூரித்தேன். அதனால் யான்பெற்றபாக்கியத்தை அரசருள்ளும் தேவருள்ளும் இதற்குமுன் யார் பெற்றனர்? இனிப்பெறுபவர்யார்? நீர் என்மீது எப்போதும் பரிபூரணகடாட்சம் வைத்தருளல்வேண்டும்; சாந்தீபினிமுனிவரிடத் தம்மைக்கண்ட நாள்முதற்கொண்டு இந்நாள்காறும் நீர் என்மனத்தைவிட்டகலா திருக்கின்றீர்;பெருங்குணமுடைய பெரியோரே! இனியெப்போதும் உம்மை யான் மறவாதிருப்பேன். ஒருவன் அளவிறந்த பாக்கியங்களைப் பெற்றானினும், அவை அவனுக்குப் பழைபநட்பினினும் சிறப்புடையனவாமோ? ஆகாவன்றோ? அறிவுடையார் சுருதி ஸ்மிருதி புராணம் இதிகாசமுதலியவற்றை யெல்லாம் நன்காராய்ந்து, அவற்றின் பொருள்களையுணர்ந்து, இது புண்ணியம், இதுபாவமெனப்பகுத்தறிந்து, அக்காரியம் நன்மையைத்தருவது; இக்காரியம் தீமையைத் தருவதென்று தெரிவிப்பவர்களுடைய சிநேகத்தைத் தாம் இறந்தாலும் மறந்துவிடுவாரோ? மறந்துவிடுவாராயின், அவர் நாயைப் பார்க்கிலும் இழிந்தவராகவன்றோ வாவர்? அந்தணர் குலதீபமே! நல்லார் சொல்லும் சொல்லைக் கேட்கவிரும்புவதும், நல்லாரைத் தரிசிப்பதும், நல்லார்க்கு அவர்வேண்டியதொன்றைக் கொடுப்பதும், நல்லாரைப் புகழ்ந்துபேசுவதுமாகிய இவையெல்லாம் நன்மைதருவனவாமென்று நல்லோர் கூறுகின்றனரன்றோ? இவையாவும் அடங்குமாறு நல்லாரது நட்பினை எப்போதுங் கொண்டிருத்தல் மிகநன்மையைத் தருவதாமன்றோ? ஒருவன் பொன்னுள்ளவனா யிருப்பினும், பூமியுள்ளவனாயிருப்பினும், அறிவுள்ளவனாயிருப்பினும், அவன் பெருந்தவத்தினரது நட்பில்லாதவனாயிருந்தால் யாதுள்ளவனாவன்? ஒன்றுமில்லாதவனாவன். மற்றொருவன் பொன்னில்லாதவனா யிருப்பினும் பூமியில்லாதவனாயிருப்பினும் அறிவில்லாதவனாயிருப்பினும், அவன் பெருந்தவத்தினரது நட்புடையவனாயிருந்தால் யாதில்லாதவனாவன்? எல்லாமுடையவனாவன். பெரியோர்கள் ஒருவன் பேயோடுபழகினும், அவன் அதன் நட்பைவிட்டுப்பிரிவது மிகக்கஷ்டமாமென்று கூறுகின்றனர். பெரியோர்களது நட்பு அருந்தவத்தின் பயனாகக் கிடைப்பதாம்; அஃது அருந்தவஞ்செய்து பெறுவதன்றி யெளிதிற் கிடை

க்குமாயின், அதனை நற்குணமுடையார் அவமதித்து விடுவரோ? கல்விகேள்வி அறிவுஒழுக்கமுடைய பெரியார் தம்மோடு நட்புச் செய்தவர் தவறுசெய்யும் சமயம்நேரிடின், அப்போது விரைந்து சென்று அவர்க்குக் கண்டித்துப் புத்திசொல்லி அவரைச் சன் மார்க்கத்திலொழுகுமாறு செய்வார்கள். புண்யலோகம்(சுவர்க்கம்) நட்பும், பாவலோகம் (நரகம்) பகையுமாக நற்போதம் செய்கின்ற வாது நட்பு யார்க்குங் கிடைப்பது மிக அருமையானதாம்.

(வரும்)

இன் சொல்.

“ஞயம்பட வுரை”—ஔவையார்.

“சிறுமையுள்நீங்கிய இன்சோல் மறுமையும்
இம்மையும் இன்பந் தரும்”—திருக்குறள்.

இன்சொல் என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு வியாசம் எழுதுவதைச் சிலர் அநாவஸ்யமென்று கருதலாம். ஆனால் இன் சொல்லின் பயனை நன்கறிந்தவர்கள் அங்ஙனம் கருதார்கள். தமிழ்வேதத்தின் தலைவராகிய திருவள்ளுவரும் “இனியவை கூறல்” என்று ஒரு அதிகாரம் வகுத்துக் கூறியுள்ளார். மனித வாழ்க்கையை எளிதும் இனிதுமாக்கும் சிறந்த குணங்களுள் இன்சொல் கூறும் குணம் மிகச்சிறந்த குணமாம். வேறு எத் தனையோ சிறந்த நற்குணங்கள் ஒருவனிடம் இருந்தாலும் இன் சோல் ஒன்றுமட்டும் அவனிடம் இல்லாதிருக்குமாயின் அவனை ஒருவரும் விரும்பார் என்பது நிச்சயம். வேறு எத்தனை துர்க் குணங்கள் இருப்பினும் ஒருவன் இன்சொல் வழங்கும் இனிய பண்பு ஒன்றைமாத்திரம் கொண்டிருப்பானாயின் அவனை யாவரும் விரும்புவார் என்பதும் நிச்சயமாம். இதுபற்றியே நமது முன் னோரும் இன்சொல்லை மிகவும் சிறப்பித்து,

“இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே.”

என்று அதனை இனிது வற்புறுத்திக் கூறினர். “ஞயம்பட உரை” என்றுகூறிய ஔவைப் பிராட்டியார் “வன்சொல் வழங் கேல்” என்றும் கட்டளையிட்டார் மனிதவாழ்க்கையாகிய நல்விரு

க்ஷம் கிளைத்துச்செழித்து இனிதுமலர்ந்த சிறந்த மலராகும். இன்சொல்லை ஒருவன் என்றும் கொண்டிருப்பானாயின், அவன் இறுதியில் அதன்பயனாகிய மோக்ஷம் அல்லது மெய்ப்பொருள் என்னும் கனியையும் அடைதல் நிச்சயமாம். திருவள்ளுவரும் இன்சொல்லைச் "செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்" என்றார். இரும்பைத் தன்மாட்டுப் பிணிக்கும் காந்தத்தையொத்து, இன்சொல்லானது உலகம் அனைத்தையும் தன்னையுடையார் மாட்டு வயப்படுத்தும் அருந்திறனுடையது.

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்."

என்று திருவள்ளுவர் கூறியதும் இன்சொல்லையேயன்றோ? பிறரைத் தம்மை .யுடையார் மாட்டுப் பிணிக்கும் சிறந்த குணங்களுளெல்லாம் சிறந்தது இனியவைகூறும் இந் நற்குணமேயாம். அடக்கம், அன்பு, அருள், பொறை, வாய்மை முதலிய மனிதர்க்குரிய சிறந்த குணங்களையெல்லாம் ஒருங்குடையாரே சதா இனியவைகூறும் இயல்பினராதல்கூடும். ஒழுக்கமுடையவர் தீயமொழிகளை வழுக்கியும் வாயாற்சொல்லார் என்று திருவள்ளுவர் அருளியிருப்பதும் இங்கு ஆராயத்தக்கது.

இன்சொல்லை ஓர் ஆங்கிலப் புலவர் சூர்ய ப்ரகாஸத்துக்கு நிகராகக் கூறுகின்றார். இனிய மொழிகள் உலகத்தின் ஸங்கீதம் என்பது மற்றொரு மேற்றிசைப் புலவரின் வாக்காம். சதா இனிய வார்த்தைகள் கூறும் நற்குண முடையவரிடத்துத்தான் யாவரும் மிகுந்த சம்பந்தம் வைத்துக்கொள்ள விரும்புகின்றனர். தனது மலர்ந்த முகத்தாலும் இனிய மொழிகளாலும் பிறரைத் தன்வயப்படுத்தும் வியாபாரியிடமே ஜனங்கள் மிகவும் விரும்பிப் பற்றுவரவு செய்ய விரும்புகின்றார்கள். கடுகடுத்த முகத்தையும் சுடுசுடுத்த சொல்லையும் கொண்டுள்ள மனிதன் மனிதனேயெனினும் மனிதர் அவனை விரும்பார் என்பது திண்ணம். இன்சொல் இம்மையும் மறுமையும் இன்பந் தரும் என்று வியந்து கூறிய திருவள்ளுவர் வன்சொல் கூடாதென்பதையும் தமது நூலில் பல இடங்களில் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

"இனிய வுளவாக, இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று".

என்றும்,

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம்".

என்னும் குறளில் வேந்தர்க்குக் கடுஞ்சொல் கூடாதென்பதையும்,

"கடுஞ்சொல்லன் கண்ணில னாயின் நெடுஞ் செல்வம்
நீடின்றி யாங்கே கெடும்".

"கடு மொழியுங் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடு முரண் தேய்க்கும் அரம்".

என்னுங் குறள்களில் அஃது அவர்க்குப் பெருங் கேட்டைத் தரும் என்றும் கூறியுள்ளார்.

"முகத்தா னமர்ந்தினிது நோக்கி, அகத்தான்
இன்சொ லினதே அறம்".

என்னும் குறளில் ஒருவனைக் கண்டபொழுதே முகமலர்ந்து உவகையோடு இனிதாக நோக்கிப் பின் சமீபித்த பொழுது அகமலர்ந்து இனிய சொற்களைச் சொல்லுதலின் கண்ணதே அறம் என்றும் கூறினார். வேறு எந்த அறத்தைச் செய்யாதுவிடினும் இனியவை கூறும் அறம் ஒன்றையேனும் செய்தல் யாவர்க்கும் எளிதாமன்றோ? அகமலர்ந்து ஒருவர்க்கு ஒரு பொருளைக் கொடுத்தலைவிட முக மலர்ந்து இனிய வசனங்களைக் கூறல் ஒருவர்க்கு நன்றாம். புண்ணியங்கள் யாவற்றினும் மிக எளிதாகச் செய்யக் கூடிய இனியவை கூறல் என்னும் ஒரு புண்ணியச் செயலைமட்டும் மனிதர் கைக்கொண்டொழுகு வாராயின் அஃது எத்தனையோ வேறு புண்ணியங்களை விளைவிக்கும். பிறரது அறியாமைக்காக அவரிடம் வன்சொல்வழங்கு மாறு நேருங்காலங்களில் நான் பாவஞ் செய்ய நேர்கின்றது என்று சதா இனியமொழி பேசும் பண்புடைய பெரியர் ஒருவர் கூறுகின்றார். பாவச்செயல்கள் செய்தற்கு எளிதாகவும் புண்ணியச் செயல்கள் செய்தற்கு அரிதாகவும் இருக்கின்றன என்று புத்த பகவான் கூறியுள்ளார். ஆனால் மிகச்சிறிய பாவச் செயல்களையும் செய்தல் அறிவாளிகளுக்கு அரிதாகவே யிருக்கின்றது. இதுவே நியதியுமாகும்.

"தேமொழி, கிளிமொழி, தேனினும் இனியசொல்லாய், அஞ் சொல் நல்லாய், அமிழ்தினும் இனிய சொல்லாள், கண்டன

மொழியாள் என்று பலவாறாக நமது முன்னோர் நமது நாட்டு மாதரைக் காவியங்களில் புகழ்ந்திருப்பது அவர்கள் சதா இனிமையாகப் பேசுவோர் (ம்ருது பாஷிணிகள்) என்பதைக் குறிக்கவேயன்றோ? இனிமையாகப் பேசும் இயல்புடைமையாலன்றோ பட்சிகளாகிய கிளியும் குயிலும் நாகணவாய்ப் புள்ளும் மனிதரால் பெரிதும் விரும்பப்படுகின்றன? மனிதர் கடுஞ்சொற்களை உபயோகிப்பதுபோலக் கர்ண கடூரமாகச் சப்திப்பதனாலன்றோ கத்தபம் யாவராலும் வெறுக்கப் படுகின்றது?

அடக்கமும் அன்பும் அமைதியும் பொருந்திய மனத்திலிருந்து வரும் வசனங்கள் எத்துணை இன்பம் பயக்குகின்றன? உள்ளங் குளிர, உயிர்குளிர, மெய்குளிரப் பேசும் இயற்கை உண்மையில் ஒரு தெய்விக ஸம்பத்தே யாகும். இனிய வசனங்களைப் பேசுதலின் பயனை உள்ளவாறு அறிந்து, அதனைத் தமது வாழ்க்கையில் விடாது கைக்கொண் டொழுகும் அறிவாளிகள் இம்மையில் சாந்தியையும் பிற நலங்களையும் பெறுவதுடன் மறுமையில் தமது வாழ்க்கையின் பெரும்பயனாகிய மெய்ப் பொருளையும் அடைவார் என்பது நிச்சயம்.

துருவ சரித்திரம்.

(முன் தொடர்ச்சி.)

சங்கு சக்ர பீதாம்பர தாரியும், சதுர்ப்புஜரும், நீலமேக ஸ்யாமளமேனி யுடையவருமாய அச்சுதனை ஹிருதயத்தில் த்யானித்து வரும் துருவனுக்கு அந்த ஜகத்பிரபு கருணை செய்யத் திருவுளங் கொண்ட படியே கருட வாகனத்தின் மீது ஆரோகணித்துத் தம் பக்தனாகிய அச்சிறுவனுக்கு அநுக்கிரகஞ் செய்ய மதுவனஞ் சென்றார்.

பகவான் அங்குத் தோன்றியதும், அவ்விளைஞனாகிய பரம ஞானி ஹிருதயத்திற்கண்டு தரிசித்த அவருடைய திருமேனியைக் காணாமையாற் கலங்கிக் கண்ணை விழித்தான். அப்பொழுது ஆபத் பாந்தவனும் அநாதரக்ஷகனுமாய பரந்தாமனைச் சங்கு, சக்ரம், கௌஸ்துபம், வனமாலை, கிரீடம், ஹாரம், இவற்றைத் தரித்தவராய்ச் சதுர்ப் புஜமும் தாமரையிதழ் போன்ற விசாலமான நேத்ரமு முடையவராய் விளங்கக்கண்டு பேச நாவெழாமல் த

டாகாரமாகத் தரையில் விழுந்து பன்முறை நமஸ்கரித்து எழுந்து அந்தப் பகவானைக் கண்ணாரக்கண்டு அவரைத் தழுவிக்கொள்ள விருப்பம் மேலிட்டவன் போல் இருந்தான்; அவன் அவரைத் துதிக்க வேண்டு மென்னும் விருப்ப முடையவனாக இருந்தும் அவ்வாறு செய்யத் தெரியாமல் தயங்கி நின்றான். என்னதெரியும் அவனுக்கு? உலக முணராத பாலனன்றோ? எப்படியாவது நாம் மேலான பதவியை யடைதல் வேண்டும் என்று கொண்ட வைராக்கிய மல்லவா அவனை வாச மாலை யணிந்த வாசுதேவனைக் காணும் பாக்கியம் பெறச்செய்தது?

அச்சிறுவன் மீது தண்ணருள் பாலிக்கத் திருவுளங் கொண்டெழுந்தருளிய திருமருமார்பன் அதை யறிந்து, புன்சிரிப்புடன் தம்முடைய கரகமலத்திலகும் சங்கத்தினாலே கிருபையுடன் அவனுடைய கபாலத்தை ஸ்பரிசித்தார். பின் என்னசொல்வது! பாலகன் பரமானந்த பரிதனானான். அவன்உள்ளத்தில் இன்பவெள்ளம் பெருகத் தொடங்கியது. வேதமயமான கலைமகளின் கிருபை வந்துகூடிற்று. உடனே அச்சிறுவன் ஜீவேச்வர சொரூபத்தின் நிச்சயத்தை அறிந்தவனானான். என்றும் அழியாத பதவியை விரும்பியவனாகிய அவ்விளைஞன் பக்தி மேலிட்டவனாய்ப் பகவானைப் பின் வருமாறு துதிக்கத் தொடங்கினான்:—

பங்கய நயனபோற்றி பண்ணவர்க் கிறைவபோற்றி
சங்கொடு திகிரியேந்தும் சற்குண மணியேபோற்றி
மங்குலை யனையநீல மணிநிற மலையேபோற்றி
எங்குறை முடிக்கவந்த இறைவனே போற்றிபோற்றி.

அகிலமு முயிருமாகி யவையெலா மன்றிவேறாய்
நிகழுமெய்ப் பொருளேபோற்றி நினைத்தடி பரவுந்தூயர்
அகமலரிலகுஞான ஆநந்த வுருவே போற்றி
முகிலெனக் கருணைநல்கும் முகுந்தனே போற்றிபோற்றி.

சரணமென் றடைந்தவென்றன் சஞ்சல மொழித்துமாறாக்
கரணமு மறிவுந்தந்து கழலினை பணியவைத்தோர்
அரணென நின்றுஞான வறிவெனக் கூட்டிநின்றன்
புராணமெய் யுருவங்காட்டிப் புரந்தநின் பெருமைபோற்றி.

இவ்வாறு பாடி மனங் கசிந்துருகித் துதித்ததும் பகவான் பரிபூர்ணமான கிருபையை அவன் மேல் செலுத்தி அவனைப் பார்த்து "குழந்தாய்! மனமகிழ்ச்சி யடைந்தேன். நீ ஒருவரும்

செய்தற் கரிய பெருந் தவம் புரிந்தாய்; உன்னை என் பரமபக்தர் களுள் ஒருவனுகக் கொண்டேன். உன் விருப்பத்தையும் உணர்ந் தேன். நீ விரும்புகிறபடியே எல்லோராலும் அடைதற்கரியதும், சிறந்ததும் மேலானதுமாய பதவியை உனக்கு அளித்தேன். அப் பதவி தேஜோ மயமானது. * ஸூரியன் முதலாகிய நவக்கிரகங் களும் அசுவினி முதலாகிய நக்ஷத்திரங்களும் அதன்பாற் பிணை பட்டுச் சுழலும் திக்குத் தேவதைகளும், ஸப்தரிஷிகளும் வல மாக வந்து கொண்டிருக்கத் தக்க பெருமை வாய்ந்தது அப் பதவி. இவ்வரிய பெரிய பதவியையடைய இன்னும் சிறிது காலம் பொறுக்கக் கடவாய். உன் தந்தை உன்னிடம் ராஜ்யத்தை ஒப்பு வித்து விட்டு வனத்தை நோக்கித் தவம் புரிவதற்குச் செல்வான். பின் நீ அங்கிருந்து இந்தப் புவியை இருபத்தாறாயிரம் வருஷம் ரக்ஷிக்கக்கடவாய். உன் அண்ணனாகிய உத்தமன் காட்டிற்கு வேட்டைக்குச் சென்று அங்கு மரிப்பான். அவனை அவன் அன்னை தேடிச் சென்று காட்டுத்தீக் கிரையாகி உயிர் நீங்குவள். பின்னர் நீ அநேகயாகங்களால் என்னைத் திருப்திசெய்வித்து தேகத்தின் அந்தத்திலே என் திருவருளால் மீண்டும் இம்மண்ணு லகிலலே பிறவியை யடையாத பெருவாழ்வை யடைவாய். உன்னு டைய அவ்வாழ்வு ஸர்வலோகங்களாலும் போற்றத்தக்கதான சிறப்புடைய தாயிருக்கும் என்னும் இவ்வரதை யளித்து அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே மறைந்தார் பகவான்.

இங்ஙனம் வரந்தந்து பகவான் மறைந்ததும், துருவன் பெ ருங் கிலேசத்தையுடையவனானான். ஏன்? விரும்பியபடி வரம்பெற வில்லையா? எனில், அவன் மனத்தில் பேரறிவு பிரகாசிக்கின்ற மையால் அப்பதவியினும் மற்றும் எப்பதவியினும் சிறந்ததும் என்றும் அழியாததுமாகிய முத்தியை நாடியது. ஆகவே அவன் வேத வேதங்களை நன்குணர்ந்த பரமஞானிகளுக்கும் கிடைத்தற் கரிய பகவானுடைய திவ்ய தரிசனத்தை ஆறுமாத காலஞ் செய்த அரிய தவத்தினல் அடையப்பெற்றும், அவ்வரிய பதவியை யடையும் பாக்கிய மற்றவனானேனே! எனக்கு இப் போது கிடைத்த இப்பதவி என் மாற்றாந்தாயின் மீது கொண்ட கோபத்தினாலே அடைய விரும்பியதற்குத் தான் பயனாயிற்று. இதனினும் சிறந்ததான அந்தப் பேரின்ப வீட்டை வேண்டா தொ ழிந்தேனே; என் மதியை என்னென்று சொல்வது; ராஜ சமுகத்

திற் சென்று பதரை யாசித்தவனானேன். என்னிலும் பாக்கியவீனனொருவன் உண்டோ இவ்வுலகில்?-என்று சொல்லித் தன்னைத்தானே வெறுத்துக்கொண்டு அவ்விடம் விட்டுச் சென்றான்.

அப்பொழுது அங்கு வந்த சிலர் துருவனைக்கண்டு பெரிய ஆச்சர்யமடைந்தார்கள். அவர்களுள் ஒருவன் ஓடோடியும் சென்று நகரத்தை யடைந்து உத்தானபாதனாகிய துருவனுடைய தந்தையிடம் இச்செய்தியைத் தெரிவித்தனன். அவன், மாண்ட மகவு மீண்டதெனக்கேட்டதற்கொப்ப மகிழ்வெய்திப் புத்திரனுடைய வருகையைத் தெரிவித்தவர்களுக்கும் நல்ல வெகுமதியளித்து உடனே பட்டின முழுதும் அலங்கரிக்கும்படி உத்தரவு செய்தான். பின்னர் பல வகை வாத்யங்களுடனும் தனது இரண்டு மனைவிமார், புத்திரன் உத்தமன், மந்திரிகள், நகரத்துப் பெரியார், பிராஹ்மணர் முதலியோர் புடைசூழ ரதத்தின் மீது புறப்பட்டு உபவனத்திற்குச் சென்றான். அங்கே மகா பக்திமானும் தவநிதியுமாகிய துருவன் வரக்கண்டான். உடனே இரதத்தினின்றும் இறங்கி விரைவாக அருமைத் திருமகனிடம் சென்று அவனைத் தன்கரங்களால் தழுவிக்கொண்டு அப்பாகண்மணி! அரும் பெருஞ் செல்வமே! என்று முத்தமிட்டு உச்சிமோந்து, தன் இருகண்களினின்றும் ஆநந்த பாஷ்பத்தைப் பெருக்கினான். துருவன் தன் தந்தையின் இருபாதங்களிலும் சிரந்தோயத் தரையில்விழுந்து பணிந்தெழுந்து தன் அன்னை, மாற்றாந்தாய், மற்றும் நகரத்துப் பிராம்ஹணர், பெரியர் யாவரையும் பணிந்தெழுந்து கைகூப்பியவாறே நின்றான். அவனை ஸுநீதியும், ஸுருசியும் கட்டித்தழுவி முத்தமிட்டு அப்பா கண்மணி! எங்கள் செல்வமே! குலம்விளங்க வந்த மணிவிளக்கே! கோதிலாத குணமணியே! உன்னைப்பெற்ற நாங்கள் பதிதர்களானோம் என்று பலவாறாகக்கூறி முத்தமிட்டு மகிழ்ந்தனர். பிராம்ஹணர்களும் மங்களாசீர் வசனம் கூறினர். வாத்தியம் பலவும் முழங்கின. இச்சமயம் துருவனைத் திவ்ய ரதத்தின்மீது அலங்காரத்துடன் எற்றி வைத்தனர் யாவரும். பின்னர்ச் சற்று நேரத்திற் கெல்லாம் ரதம் நகரத்திற்குட் சென்றது. நகரமுழுதும் ஆதித்தன் வரவால் இருள் நீங்கிய உலகம்போல ப்ரகாசித்தது. எல்லோரும் என்றுமடையாத பேருவகையடைந்து மங்களம் கூறினர். ஸ்திரீகளெல்லோரும் துருவன் புகழைப்பேசிக் கானஞ் செய்தனர். வானம் மலர் மாரி பொழிந்தது.

இவ்வாறு யாவரும் புகழ நகரத்திற்குள் பிரவேசித்த துருவன் அரண்மனைக்கருகே வந்ததும் அவனை ரதத்தினின்றும் பிரமுகர்கள் கைகொடுத் திறக்கி அரண்மனைக்குள் அழைத்துச் சென்று செயற்பாலனவாகிய பல உபசாரங்களையும் செய்து புகழ்ந்து மகிழ்ந்தார்கள்.

அத்யாயம்—6.

மகாபாகவத சிரோமணியாகிய துருவன் நகரத்தையடைந்த சிலகாலத்திற் கெல்லாம் உத்தானபாதன் தன்னுடைய ராஜ்ய பாரத்தை அவனிடத் தொப்புவித்துத் தவஞ்செய்வதன் பொருட்டு வனமேகினன். பின்னர் அந்தத் துருவன் அவனிமுழுதும் புகழும் பெரிய பூபதியாயினன். அப்பொழுது அவன் சிம்ஸுமாரன் என்னும் அரசனுடைய புதல்வியும் குணவதியும் அழகிற் சிறந்தவளுமாகிய பிரமியை என்னும் பெண்ணரசியையும், வாயுவின் புதல்வியாகிய இளை யென்பவளையும் மணந்து கொண்டான். பிரமியை என்பவளுக்கு வற்சரன் கல்பன் என்னும் இரண்டு ஆண் குழந்தைகளும், இளை யென்பவளுக்கு உற்பவனென்னும் ஒருபிள்ளையும் ஒருபெண்ணும் பிறந்தனர். உத்தமன் என்பவனுக்கு விவாக மென்பதே நடவாதொழிந்தது. அவன் ஒருநாள் வனத்திற்கு வேட்டையாடச் சென்றான். அங்கே பலவானுய ஒரு யக்ஷனால் கொல்லப்பட்டான். அந்த உத்தமனுடைய அன்னையாகிய சுருசி அவனைத்தேடிச்சென்று மகனடைந்த கதியையே யடைந்தாள்.

இவ்வாறு தன் சகோதரன் கொலையுண்டதைச் சகியாதவனாகிய துருவன் உடனே ஜயத்தையே கொடுக்கத்தக்க ரதத்தின் மீதேறிப் பெரும் படைகள்சூழப்புறப்பட்டு வனஞ்சென்று யக்ஷர்களிருக்கும் மலைப்பிரதேசத்தை யடைந்து அங்கு நின்று சங்கத்வனியை முழக்கினான். அதைக்கேட்டதும் உத்தமனைக் கொன்ற யக்ஷனும் அவனைச்சூழ ஆயிர ஆயிரக்கணக்கான யக்ஷர்களும் புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதுபோல ஏககாலத்தில் வெளிப்பட்டுத் துருவனை எதிர்த்து அவன்மீது சரமாரி பொழிந்து மறைந்தார்கள். அப்போது துருவன் சரமாரியினால் மறைக்கப்பட்ட பர்வதம்போலக் காணப்பட்டான். இதை வானத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த தேவர்கள் சூரியனுக் கொப்பான துருவன் யக்ஷர்களுடைய பாணக்கூட்டத்தினால் மறைக்கப்பட்டானென்று பயந்து ஆகாகாரம் செய்தனர்.

அச்சமயம் துருவன் பனிக்கூட்டத்தைப் பிளந்து கொண்டு மேலேகிளம்பும் பகலவன் போல அச்சரக்கூட்டத்தைப் பேதித்துக்கொண்டு வெளிப்பட்டு அஸ்திர சமூகங்களை யெல்லாம் தன் பாணங்களினலே பொடியாக்கி உதிர்த்து, அந்த யக்ஷர்கள் கவசங்களையும் ஹாரங்களையும் கிரீடங்களையும் பொடிசெய்தான். பின்னர் அவர்களுள் அநேகர் உடல்வேறாகி விழவும், கரமற்று அநேகர் விழவும், சிரமற்று அநேகர்விழவும், கால்களற்று அநேகர் விழவும், பாணப்பிரயோகம் ஓபாமற் செய்து ஆட்டுமந்தையிற் புகுந்து அலைக்கும் சிங்கம் போல உலாவினன். இப்போது யக்ஷர்கள் அநேகர் இவனை எதிர்க்க நம்மாலாகாதென்று கூறிக்கொண்டு யுத்தகளத்தில் நிமிஷமும் தாமதியாது ஓடி ஒளிந்து கொண்டனர்.

இவ்வாறு துருவன் யக்ஷர்களைப் பெருங்கோபத்துடன் அதமாக்குவதைப் பார்த்தபிதாமகனுகிய ஸ்வயம்பு மநுவானர் முனிவர்கள் பலருடன் துருவன் முன்வந்து, கூறுகின்றார்—

குழந்தாய்! இக்கோபத்தை விட்டுவிடு; இச்செய்கை நாம் செய்யத்தக்கதன்று. இது சத்புருஷர்களாலே நிந்திக்கத்தக்கது. சத்புருஷர்களாலே நிந்தித்தற்குரிய செய்கையைச் செய்பவன்உலகத்தில் அறிவீனனவன். இது குலத்திற்கு யோக்கியமானதன்று. உன் சகோதரனைக் கொன்றவனொருவனுக விருக்க அவன்பொருட்டு யக்ஷக்கூட்டங்களையே அழிப்பது பெரிய தவறு. பகவானைப் பக்தியோடு ஆராதித்து யாவரும் அடைதற்கரிய பெரியபதத்தை யடைந்த நீ இக்காரியஞ் செய்வதெனின் சிறிதும் அழகாகவில்லை. பெரியோரிடத்திலே பொறுமையும், நல்லோரிடத்தில் நயமும், தாழ்ந்தவரிடத்தில் தயையும், சமமானவரிடத்தில் நட்பும், ஏனைய உயிர்வர்க்கங்களிடத்தி லெல்லாம் சமமான எண்ணமும் கொள்கிறவர்களுக்கே ஈசன் கருணையுண்டாகு மென்பர். ஆகையால் இக்கொடுந்தொழிலை விட்டுவிடு;உனக்கு மங்களமுண்டாகும். உன்னை உலகமுழுதும் துதிக்கும். உன்னிடத்தில் எல்லாப்பாக்யமும் நிறைந்திருக்கும். பகவானையே சரணமாக அடை. கோபம் என்பது பொல்லாதது. அதனுல் அநர்த்தம் அளவிறந்தனவாக விளையும். அந்தக்கோபத்திற்கு இடந்தரா தடக்குங் குணமே குணமாகும். அதனை வியாதிக்கு ஔஷதம் கொடுத்து அடக்குவது போல விவேகம் என்னும் மருந்தினுல் அடக்கவேண்டும்.

ரோஷமுடையவரைக் கண்டால் உலகமானது நடுங்கும். ஆகையால் கோபத்தை யொழிக்கக்கடவாய். நீ யக்ஷர்களைக் கொன்றமையால் சிவபெருமானுடைய நண்பனும் யக்ஷாதிபனுமாகிய குபேரனுக்கு பெரிய அபராதம் செய்தவனாகின்றாய். அவனை நீ மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டியது அவஸ்யமாம்' என்று கூறினார்.

தனக்கு இவ்வாறு புத்திமதி கூறிய தம் குல முதல்வராகிய மநுவைப் பார்த்துத் துருவன் கைகூப்பி வணங்கி நின்று "மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்" என்பதற் கிணங்கித் தம்முடைய ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டவனானேன். கோபத்தை விட்டேன். என்னை அந்தக்குபேரன் மன்னிக்கக்கடவன் என்றான்.

மநு சந்தோஷித்துக் குபேரனுக்கு துருவனைப்பற்றித் தெரிவித்தார். குபேரன் உடனே துருவனிடம் வந்து அவனுக்கு வேண்டிய வரங்களையளித்துத் தன்பதவிக்குச் சென்றான். பின் துருவன் ஜயகோலத்தோடு நகரத்தையடைந்து நீதியினின்று சிறிதுந்தவறாது ஜனங்களைத் தன்னை ஈன்ற தாய்தந்தையர் போலப் பாவித்து அன்பு பாராட்ட எல்லோருக்கும் நல்லவனாய் ஈசனுக்குகந்தவனாயிருந்து அரசுபுரிந்து வந்தான்.

இவ்வாறு இருபத்தாறாயிரம் வருஷம்சென்றன. பிறகு துருவன் தன்ராஜ்யத்தைத் தன்மைந்தனிடம் ஒப்புவித்துத் தன்முன்னோரை யநுஸரித்துத் தவத்தைநாடிப் பதரிகாச்ரமம் சென்றான்.

அங்கு அவனுக்குத் தேவச்ரேஷ்டர்கள் விமானங் கொண்டுவந்து நிறுத்தினர். அதில் அவன் ஏறிக்கொண்டான். அப்பொழுது மேளவாத்தியங்கள் முழங்கின. முனிவர்கள் ஆசீர்வசனங் கூறினர். வானம் மலர் மாரி பொழிந்தது.

இவ்வளவு ஆநந்த வைபவத்தோடு துருவன், பகவான் முன்னர் வரமளித்தபடி யாவராலும் அடைதற்கரியதும், மேலானதும், யாவரும் அறிதற்குரியதுமாகிய பதவியை யடைந்தான்.

இச்சிறுவனுடைய வைராக்யத்தையும், மதியூகத்தையும், விடாமுயற்சியையும், சலனமற்ற மனோதிடத்தையும், அவனுடைய பகவத் பக்தியையும் மூவுலகமும் புகழ்ந்து மகிழ்ந்தன; இன்னும் புகழ்ந்து துதிக்கின்றன. இனி என்றும் புகழ்ந்து போற்றத்தக்கனவாகவும் விளங்குகின்றன.

எல்லாம் வல்ல இறைவ னடிதொழும்
நல்லோ ரெல்லா நலமும் பெறுவரே.

வரகவி-திரு-அ-சுப்ரமணிய பாரதியார்.

நல்லொழுக்கம்.

நமது ஐசுவரியத்தினும் மேன்மையானதும் நீடித்திருப்பதுமானது நல்லொழுக்கமாம் எந்த அந்தஸ்திலுள்ளவரும் அடையக் கூடியதும் அடையவேண்டியதும் அஃதேயன்றி வேறல்ல; அதற்குத் தீங்குவிளைக்க ஒருவனாலு மாகாது; வேறெவற்றாலு மாகாது. அது நமது அற்ப ஆசை (Human passion) யின்மீது வெற்றியென்னலாம். அது தன்னையண்டின யாவருக்கும் அளவற்ற நம்பிக்கையை அளிக்கும் அருமையான கருவாகும்; அஃது ஒருவனுடைய நடத்தையை ஒழுங்காய் நடத்தவல்லது; அது மனம்போன போக்கெல்லாம் ஒருவனை விடாது. மனச்சாக்ஷியின் கட்டளைகளுக்கு மாறாகநடவாது ஒருவனைக் காக்க வல்லது அதுவே; நல்ல அறிவுக்குப் (Reason) பொருத்தமாகவே ஒருவனுடைய ஆசையைச் (Will) செலுத்தும்; எப்பொழுதும்மனச்சாந்தியையும் மகிழ்ச்சியையும் தன்னை யுடையவனுக்குத் தருவது அஃதொன்றே; முதலில், அஃது ஒருவனைப்பல தீமைகளிற் (Temptations) செல்லவிடாமல் தடுக்கும் அணியாகும்.

உதாரணம் உபதேசத்தை விடச் சிறந்ததென்று ஓர் ஆங்கிலப் பழமொழி வழங்குகிறது. மானிட சுபாவத்தைத் தெளிவாயறிந்து, யாதொரு ஐயமுமின்றி, யாவரும் அறிந்துகொள்ளும்படி கூறிய நம் ஞானத்தாயாகிய ஒளவைப் பிராட்டியார் நல்லாரைக்காண்பதுவும் நன்றே ... என்று அருளிச்செய்தது நன்கு சிந்திக்கத்தக்கது.

நல்லொழுக்கத்துக்கு முதலாவது இன்றியமையாதது தன் அடக்கமாம். மனிதனைப் பிராணிகளினின்றும் வேறுபடுத்தி உயர்வைக்கொடுப்பதும் தன் அடக்கமேயாம். மிருகம் தன்னிச்சைப் படியெல்லாம் நடக்கிறது; ஆகவே தன்னடக்க மில்லாது, இச்சைப்பிரகாரம் இயங்குபவன் மிருகத்துக்கு நிகரானவனே. மனிதனிடம் தெய்விகத் தன்மையும், மிருகத்தன்மையும் பொருந்தியிருக்கின்றன. இதனையே ஆங்கிலத்தில் (Divine self, Animal self) என்று வழங்குகின்றார்கள்; இவ்விரு தன்மையும், மனத்தினிடத்து ஓயாது சண்டை செய்துகொண்டே யிருப்பதை யாவரும் எளிதில் உணரலாம்.

மிருகத்தன்மை தெய்வீகத்தன்மைக்குக் கீழ்ப்படியும் படி செய்வதே தன் அடக்கம் என்று இங்குக் கூறப்படுகின்றது; இங்ஙனம் தன் அடக்கமில்லாதவனே பலபாவங்களுக்கும் பழிகளுக்கும் ஆளாகின்றான். பிறனைக் கொலைசெய்த பாவியிடம், மிருகத்தன்மை விளங்குமேயன்றி தெய்விகத் தன்மைக்குரிய தேஜசு எங்ஙனம் விளங்கும்? நாயும் பூனையும் ஒரு காரணமுமின்றி கண்ட மாத்திரத்திலேயே சச்சரவு செய்வதுபோல, தன்னடக்கமில்லாதவர்களும் அற்பக்காரியத்திற்கு அனைவரிடமும் கோபங்கொள்வதும், அக்கிரமங்களைச் செய்வதும் சகஜமாயிருக்கின்றன.

கோபங் கொள்வோன் நாம் கண்டு இரக்கப்படத்தக்கவனே யாவன். ஏனெனில் தனடக்கமில்லாதவனது பல வீனமே கோபமாகவெளிப்படுகிறது; சினத்தை யடக்க அசக்தனாயிருக்கிறானதலின், அவன் பெரும்பேதையே யாகின்றான். தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால் — றன்னையே கொல்லுஞ்சினம் என்பதைக்கேட்டு மறியான்போலும்! கோபத்தினால் கெட்டவர்களைக் கூறின், வையத்து இறந்தாரை எண்ணிக்கொண்டற்று என்று தான் சொல்லவேண்டும். தன்னடக்கமில்லாதவன் தாழ்ந்த நிலைமையை விட்டு உயரநினைப்பது முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவது போலாம். "அடக்கம் அமரருளுய்க்கும், அடங்காமை—ஆரிருளுய்த்து விடும்" என்னும் பொய்யா மொழி நாம் மறக்கற்பாலதன்று.

உண்மை நல்லொழுக்கத்துக்கு இன்றியமையாதது; உண்மையுடையவரைப் பிறர் எக்காரியத்திற்கும் நம்புவார்கள். அது பலரையும் ஒற்றுமைப்படுத்துகின்றது. உண்மையில்லாதவர்கள் தீயோராதலின் நன்மையான நட்புக்குரியவர்களல்லர். இதுபற்றியே "தீயாரைக்காண்பதுவும் தீதே திருவற்ற தீயார்சொற் கேட்பதுவுந் தீதே" என்று அருளிச் செய்யப்பட்டிருக்கின்றது.

பொறுமையும் விருத்திசெய்யப்பட வேண்டியதே. கோபம்மனக்கொதிப்பை விளைக்குமாதலின், மனக்காய்ச்சலென்று அழைக்கப்படும். உடம்பில் சுரமுள்ளவன் எங்ஙனம் இனிப்புக்கும் கசப்புக்கும் பேதமறியமாட்டானோ, அங்ஙனமே, மனச்சுரமாகிய கோபமுள்ளவன் நன்மைதீமையை நன்கு பகுத்தறியமாட்டான். மேலும், கோபம் கோபத்தையே பெருக்கும். அத

ணல் பகை மிகுதியுமுண்டாகும். அன்பும் பொறுமையும் பகையை ஒழிக்கும். அன்பு ஒற்றுமையையும், கோபம் வேற்றுமையையும் கொடுக்கும். நமது அன்பினாலே துஷ்டஜெந்துக்களுஞ் சாந்தமடையுமாயின், அதனால் ஆகாதது எது? அன்பே உலகனைத்தையும் ஆளுவதன்றோ?

நல்லொழுக்கமுடையோரிடத்து இரக்கம் எப்பொழுதும் காணப்படும். இரக்கமானது சிறந்த தெய்விககுணமாக விருக்கின்றது. அது சுயநயநாட்டத்தைக் குறைக்கிறது. ஆகவே நடுவு நிலைமை பிறழ ஏது அதிகமாயில்லை. ஏனையோருடைய துக்கத்தைக் குறைக்கத் தங்கள் உடல் பொருள் ஆவிமூன்றையும் பொருட்படுத்தாத பெரியோர்களை விருத்தியாக்குகின்றது. இரக்கத்தினாலேயே, சிட்னி, ஹோவர்டு போன்றவர்களை நாம் இன்றும் நினைக்கும்படி யிருக்கின்றது. டேமியன் என்ற பாதிரி குஷ்டரோகிகளுக்கு உதவிசெய்யத் தானாகவேசென்று அவ்வியாதி தனக்கு வந்தகாலத்தும் ஒருசிறிதும் பின்னடையாதிருந்ததொன்றே அவருடைய நல்லொழுக்கத்தை நிலைநாட்டுகின்றது. நல்லொழுக்கமுடையோர் மானத்திற்கு மிகவும் அஞ்சுவார்கள்; பிறர் அற்பமென்றெண்ணுவதையும் அவர்கள் அலக்ஷியஞ் செய்யமாட்டார்கள்.

ஒரு தேசத்தின் பெருமை அந்தத் தேசத்தின் மிகுந்த விஸ்தீர்ணத்தாலும், அங்குள்ள செல்வர்களாலும், அங்குள்ள பலவளங்களாலும், பலவேறு நலங்களாலும் கருதப்படுவதன்று; ஆனால் அங்குள்ள ஒழுக்கமுள்ள பெரியார்களின் தொகையாலேயே தீர்மானிக்கப்படுகிறது என்று ஒழுக்கம் என்னும் அழகிய நூலின் ஆசிரியராகியஸாமுவேல் ஸ்மைல்ஸ் கூறுகின்றார்.

வேறெத்தனையோ காரியங்களில் மேம்பாடுற்றவரும் ஒழுக்கமின்றி யிருப்பின், ஒருபயனுமற்றவர்களே யாவர். ஆதலின், நல்லொழுக்கம் திடீரெனத் தெய்வகிருபையாலாவது தற்செயலாகவாவது வருமென்று நினையாமல், நமது இடைவிடா முயற்சியினாலேயே அடைந்துகொள்ள வேண்டுமென முயற்சிப்போமாக.!

நெல்லை-மாணிக்கவாசகன்.

கல்வியின் மாட்சி.

ஒரு சம்பாஷணை.

(முன்தொடர்ச்சி).

இக்கல்வி ஒருவனிடத்திருக்குமாயின் அவன்:—

"எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும் அக்குடியிற், கற்றோரை வருகவென்பார்" என்று அதிவீரராம பாண்டியரும் கூறியுள்ளார். கல்வி யென்னுஞ் சொல் வி விகுதி பெற்ற தொழிற் பெயர். இதன்பொருள் கற்றல் அல்லது ஆராய்தல் என்பது. இக்கல்வியை எப்படி கைக்கொள்வதெனின் நூல் வாயிலாக வென்ப. கற்கப்படும் நூற்கள் பொருணூல், கருவி நூல் என விரு வகைப்படும். இவற்றுள் பொருணூல், அறநூல், இன்பநூல், வீட்டு நூல் என நான்கு புருஷார்த்தங்களைக் குறிக்கும். கருவிநூல்-இலக்கணம், தர்க்கம், கணிதம் முதலியன. அறம் பொரு ளின்பம்வீ டடைத னூற்பயனே என்றபடி, தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்னும் சதுர்விதப் பலன்களை அடைதலே கல்வியின் பயனும்.

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற்பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந்தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற்றெரிந்து.

என்று நாலடியார் கூறுவது இங்கு நன்குணர்தற் பாலது. பர்த்ருஹரி யென்பவர் இவ்விஷயத்தில் கூறியது இங்கு உணரத்தக்கது. அது பின் வருமாறு:—கல்வியென்னும்பொருள் கள்வர்களால் கொள்ளை கொள்ளப்படுவதில்லை; ஸகல இன்பமு மளிக்கவவல்லது; யாசிப்போர் களுக்குக் கொடுக்குந்தோறும் விருத்தியாகின்றதே யொழியக் குறைவடைவதில்லை; கல்ப முடிவிலும் அழிவதில்லை. அத்தகைய சம்பத்து எவர்களிடம் விளங்குகின்றதோ அவர்களிடம் ஓ ராஜசிரேஷ்டர்களே! உங்களுடைய பெருமையை வெளியிடாதீர்கள். அவர்களுக்கு நிகர் யாவர்? மேலான உண்மைகளை அறிந்த அறிஞர்களை அவமானஞ் செய்யாதீர்கள் புல்லைப்போல் அல்பமான உங்கள் செல்வத்தால் அவர்கள்பயந்து கட்டுப்படமாட்டார்கள். புதிதாய் மதநீர் பெருகி அதனால்கன்னங்கருத்த வேழங்களைத் தாமரைத் தண்டு நூலால் கட்டுதல் கூடாதன்றோ? தோள் வளைகள், சந்திர ஹாரங்கள், ஸ்நானம், சந்தனம், புஷ்பங்கள், ஜடை அலங்காரம் இவையெல்லாம் அழகளிப்பவையல்ல. நல்வசனங்களோடு கூடிய கல்வியொன்றே மனிதருக்கு அணி, மற்றைய ஆபரணாதிகளெல்லாம் அழியக்கூடியன. ஆதலின் கல்வி அழகே என்றும் அழியா அழகு-பிரம்மதேவர் எவ்வளவு கோபங்கொண்டாலும் அன்னப்பறவைகள் தாமரை ஓடையில்

விளையாடும்உற்சாகத்தைவேண்டுமானால் கெடுத்துவிடலாம். அனால் பாலையும்|நீரையும் வேறு பிரிக்கும் அதன் சாமர்த்தியத்தால் ஏற்பட்டுள்ள அதன் புகழைக் கெடுக்க அவரால் முடியாதென்பது திண்ணம்.

நல்ல உபகாரம் செய்பவர்களும் நவ ரசமும் சேர்ந்து பாடுகின்றவர்களும் சுகமாய் வாழ்க! அவர்களுக்கேற்பட்ட புகழ் என்றும் உடலுக்கு மூப்பு இறப்பு என்னும் பயங்களில்லை. கல்விமான்களுடன் சேர்ந்தால் அச்சங்கம் அறிவின் அசட்டையை நீக்குகின்றது. நாவில் உண்மையை நாட்டுகின்றது. பெருமையையும் உண்டுபண்ணுகின்றது. கெட்ட நடத்தையை ஒழிக்கச்செய்கின்றது. நாலுதிக்குக்களிலும் புகழை உண்டாக்குகின்றது. ஆ என்ன ஆச்சரியம்! இன்னும் மனிதனுக்கு எதைத் தான் செய்யாது என்று பெரியோர் கூறியுள்ள யாவற்றையும் இங்குக் கூறுதல் அசாத்தியம். கல்வி எதைத் தான் கொடுக்காது! நீ இன்னும் நன்கு அறிந்திலாய்.

ஆனந்த:—எனது சற்குருவே? அடியேன் மீது அன்பு கூர்ந்து இதுகாறும் கல்வியின் பெருமையைப்பற்றிக் கூறினீர்கள். அக்கல்வியினால் மேம்பட்டவர் யாவர்? அக்கல்வியினால் செழிப்படைந்த தேசமெது? இவற்றைக் கருணை கூர்ந்து கூறவேண்டுகிறேன்.

சர்வகலாநிதி:—பாணினி, வாருசி, கௌதமர், ஜைமினி, வியாஸர், சங்கராசாரியார், காளிதாஸன், பாணன், பவபூதி, கம்பர், அதிவீரராமபாண்டியன், திருவள்ளுவர், பவணந்தியார் ஷேக்ஸ்பியர், கோக்கலே, முதலியவர்கள் கல்வியால் பெருமையடைந்திருக்கின்றனர். கல்வியில்லாதனவாகிய ஆப்பிரிக்கா, ஆசியாக்கண்டங்களிலுள்ள தேசங்கள் அநாகரீகமென்னும் அந்தகாரத்தின் கீழாழ்ந்து உழல்வதையும், கல்வியறிவு பரவிவிளங்கும் ஐரோப்பா அமெரிக்காக் கண்டத்துத் தேசங்கள் செல்வாக்குடன் சிறந்து விளங்குவதையும் நீ இன்னும் அறியவில்லை. புராதன காலத்தைத் தவிர மத்தியகாலம் எனப்படும் 12-13-14 ம் நூற்றாண்டுகளின்போது உலக நிலைமையைக் கவனிக்கின் கல்வியின் நிலைமை இனிது விளங்கும். ஆசியாக்கண்டத்தி லப்பொழுதிருந்த நாகரீகம் ஐரோப்பாவில் பெரும் பாகத்திவில்லை. கிரேக்க தேசம் அப்போது சின்னபின்னமாய்க் கிடந்தது. ஆதலால் கிரேக்கரது கல்வியும் நசித்துப்போய்விட்டது. இதனால் ஐரோப்பா முழுவதிலும் அஞ்ஞானாந்தகாரம் குடிகொண்டிருந்தது. அது பற்றியே மத்தியகாலத்தை அந்தகாரத்தின் காலம் எனச் சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர். அப்பொழுது கலை ஞானத்தால் இந்தியா தேசமும், மத ஞானத்தில்யூதேயா தேசமும், போர் வல்லமையில் அரேபியா துருக்கி தசத்தாருக்கும் முறப்பட்டிருந்

தன. முதலில் மதஞானம் ஆசியாவிலிருந்து ஐரோப்பாவிற்குப் பரவி அவர்களைச் சீர்ப்படுத்தியது பின்பு மகம்மதியருக்கும்கிருஸ்தவர்களுக்கு முண்டான யுத்தங்களின் பொழுது இந்திய அரேபியர்களின் கல்வி ஐரோப்பாவிற்குப் பரவி அவர்களை நாகரீகப்படுத்தியது. பின்னர் அதுகாறுங் கான்ஸ்டாண்டிநோபிளில் அடைபட்டுக்கிடந்த கிரேக்க ஞானிகள்வெளிக்கிளம்பிச்சென்றுஐரோப்பாவின் பலவேறு தேசங்களிலும் ஸஞ்சரித்துக் கல்வி யூற்றைத் திறந்துவிடவே அது பிரளயம் போற்பெருகிவந்து அஞ்ஞானாந்தகாரத்தை அடியோடு அடித்துக்கொண்டுபோய்விட்டது. அதனால் ஐரோப்பிய நாடுகள் யாவும் பூரணமான நாகரீகமடைந்தன. பிறகு தங்களுக்கு நாகரீகச் செல்வத்தை முதலிற்கொடுத்த ஆசியாக் கண்டத்தின் நாடுகளைவிட மேன்மை யடைந்தன. மேற்கண்ட காரணத்தால் தேசங்கள் முன்னேறக் கல்வி அத்தியாவசியமாம். ஐரோப்பிய நாடுகளிலுதித்த பிளாட்டோ...... அரிஸ்டாட்டில்......... லெஸிங் என்னும் தத்துவஞானிகள் உண்மையைப் பரம்பரையாய்ப் படிப்பித்து வருகின்றனர். பெரிக்லிஸ்......... பிஸ்மார்க்........... கிளாட்ஸ்டன் முதலிய ராஜ தந்திர நிபுணர்கள் இராஜ்ய பாரம் வகித்தபொழுது தங்கள் தேசத்தார்யாவருங் கல்விகற்றுஅதனால்தங்கள் தேசங்கள் உயரவேண்டு மென்றநோக்கத்தால் இலவசமாயுங் கட்டாயமாயும் தம் தேசத்தாருக்கு இராஜாங்கம் கல்வி கற்பிக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடித்திருக்கின்றனர். அமெரிக்கா ஐரோப்பிய நாட்டு ஜனங்களும் கற்கையே நன்றெனக் கண்டதாலும், பிறதேசம் யாவற்றிலும் சுயதேசங்கள் மேலாய் விளங்கவேண்டுமென்ற எண்ண மிருப்பதாலும் கல்வியை அக்கரையுடன் கற்றுவருகின்றனர்.

ஐரோப்பா முதலிய நாடுகளில் திநே திநே நாகரீகமும்செல்வமும் விருத்தியடைந்து கரைபுரண்டோட நம்தேசம் மட்டும் அவ்விஷயத்தில் மழுங்கிக் கிடக்கைக்குக் காரணம் யாது? அறிவின்மையே யாம்! இவ்விந்தியா தேசம் கல்விக் கிடங்காயிருப்பினும் அதனை விருத்தி செய்து கொள்வதில் அவ்வளவு திறமை இல்லை. ஆகலின் நீ எவ்விதத்திலும் கல்வியைக் கற்று அறிவை விருத்தி செய்துகொள்ளுதல்வேண்டும்.

ஆனந்தசாகரன்:—அறிவே உருவாகி இவ்வவனியின் கண் அவதரித்து ஆன்மாக்களுக்கநுகூலம் செய்யவந்த என் அருமைக் குருவே! எப்படிப்பட்ட நூற்களைக் கற்கவேண்டும்? அவைகளைக் கற்பதின் பயனென்ன? இவ்விஷயத்தில் பெரியோர்கள் என்ன கூறுகிறார்கள்? இவற்றைக்கூறவேண்டுகிறேன்.

(வரும்).

M-M-நாராயணசாமி ஐயர், முடிகொண்டான்.

ஐரோப்பா யுத்தம்.

சென்ற சிலமாதங்களாக ஐரோப்பாவில் மழைக்காலமாயிருந்தமையின் யுத்தம் உக்ரமாக நடைபெறுவது கூடாமையாயிருந்தது. இப்போது மழைக்காலம் மாறிப்போயினமையின், யுத்தம் மிகுஉக்ரமாக நடைபெறுமென்று தெரிகின்றது. பிரான்சில் நேசராஜாங்கத்தாரின் சேனையின் நடுவணியைப் பேதிக்க ஜெர்மானியர் பெரும் பிரயத்தினஞ்செய்து வருகின்றனர்; பெல்ஜியத்திலுள்ளோர் வெளியே செல்லாவாறும், பெல்ஜியத்தினுள்ளே ஒருவரும் பிரவேசியாவாறும், பெல்ஜியம் மிகுஜாக்கிரதையாகக் காக்கப்பட்டு வருகின்றது இதனால் ஜெர்மன்துருப்புக்கள் அங்கு என்னசெய்கின்றனவென்று தெரிவதற்கிடமில்லாதிருக்கின்றது. இப்போது ஜெர்மானியர்கலேக்கு மீட்டுஞ் செல்ல முயற்சிசெய்து வருகின்றனர். ஆயினும், நேசராஜாங்கத்தாரின் சேனை வீரதீரத்துடனின்று போர்செய்துவருவதால் ஜெர்மனியரது தந்திரங்களெல்லாம் அபலமாய்ப் போகின்றன. யுத்தஞ்செய்ய வேண்டுமென்று முன்ஜாக்ரதையாயிருந்து யுத்தத்தைத் தொடங்கிய ஜெர்மானியர், பெல்ஜியத்திலும், பிரான்சிலும் முன்னேறியிருந்த விடத்திலேயே யிப்போது மிருப்பதால், அவர்கள் நேசராஜாங்கத்தாரது சேனையை யெதிர்த்துச் சண்டைசெய்யும் வன்மையுடையவராக விருக்கவில்லையென்று ஊகிக்கவேண்டியிருக்கின்றது ஜெர்மன் தரைப்படையின் வன்மை யிவ்வாறிருக்க, கடற்படை வெளிவராது கீல்கால்வாயில் பதுங்கிக்கொண்டிருப்பது, அதனது வன்மையைக் காட்டுவதாக விருக்கவில்லை. வடகடலிலும், இங்கிலீஷ் கால்வாயிலும் சில ஜெர்மன் கீழ்நீர்க்கப்பல்கள் தோன்றி, அக்கடல்கள் மார்க்கமாகச்செல்லும் வர்த்தகக்கப்பல்களைச் சேதஞ்செய்து வருகின்றன. இவ்வாறு செய்வதனால் பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரது வியாபாரம் தடைசெய்யப்பட்டுப்போகும் என்றும், வியாபாரத்தடையினால் பிரிட்டிஷார் உணவில்லாமல் பட்டினிகிடக்க நேரிடுமென்றும், ஜெர்மானியர் மனப்பாலருந்துகின்றனர். பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் கடல்மீது தமது ஆணையைச் செலுத்துபவரென்பது பிரசித்தமாயிருக்கின்றமையின், அவர்களை ஜெர்மானியர் கடற்படையால் வென்றுவிட யோசிப்பது ஆகாயக்கோட்டை கட்டுவதுபோலவாகும். தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் பிரிட்டிஷார், ஜெர்மனியருக்கு